கவன ஈர்ப்புகள்

[திரு. செ. அரங்கநாயகம்]

4. ஆகவே, இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 700 மாணவர்களும், 300க்கு மேற்பட்ட மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள். அங்கே 21 வகுப்பு அறைகள் தேவைப்படுகின்றன. இருந்தாலும் 9 வகுப்பறைகளே உள்ளன. மீதம் 12 வகுப்பு அறைகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் மரத்தடியிலே கல்விப் பயின்றுகொண்டிருக்கிறார்கள். இடிந்து விழுந்த கூரைக் கட்டிடம்போல் மற்றொரு கூரைக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது.

அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா ? இறந்துவிட்ட ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த துரை என்ற அந்த மாணவனின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் கருத்தை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(22) சென்னை பல்கலைக் கழக பி.ஏ. இறுதித் தேர்வுக்கான ஆங்கில வினாத்தாளில் பாடதிட்டத்திற்குப் புறம்பாக வினாக்கள் உள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கு. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், ஜே. முகம்மது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, க்வீன் மேரீஸ் கல்லூரியில் பி.ஏ., இங்கிலீஷ் லிட்டரேச்சர் படிக்கும் மாணவிகள் இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் எழுதிய இறுதி ஆண்டுத் தேர்வில் தரப்பட்ட பெரும்பாலான வினாக்கள் தங்கள் சிலபசுக்கு சம்பந்தமில்லாமல் வந்ததால் அத்தேர்வில் தேர்ச்சி பெறுவோமா என்ற அச்சமும் வேதனையும் அம்மாணவிகள் மத்தியிலும் மற்றும் அவர்தம் பெற்றோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

கவன ஈர்ப்புகள்

[திரு. செ. அரங்கநாயகம்]

அறிக்கை

சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி குறிப்பிட்டுள்ள தேர்வு 25–4–1986 அன்று நடைபெற்றதாகவும், இத்தேர்வுகளில் 42 கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டார்கள் என்றும் தேர்வுக்குப்பின் 29–4–1986 அன்று இராணிமேரிக் கல்லூரி மாணவிகள் இந்த கேள்வித் தாளில் பிரிவு ஒன்றில் 3 கேள்விகளும், பிரிவு இரண்டில் 4 கேள்விகளும், மூன்றாம் பிரிவில் இரண்டு கேள்விகளும் பாடத் திட்டத்திற்கு புறம்பாக கேட்கப்பட்டதாக எழுதியுள்ளார்கள். இது போன்று புகார் எத்திராஜ் பெண்கள் கல்லூரியிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இரண்டாம் பிரிவில் உள்ள ஒரு கேள்வி மட்டும் பாடத் திட்டத்திற்குப் புறம்பாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பல்கலைக் கழகம், குறிப்பிட்ட கேள்வித்தாளை அப்பாடத்தின் வல்லுநர் ஒருவருக்கு அனுப்பி வைத்ததில் அவர் தந்த கருத்தின்படி கேள்வி 2(பி)ல் உள்ள ஒரு வினா மட்டுமே பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறியுள்ளதாகவும், இக் கேள்விக்கு 10 மதிப்பெண்களே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் பதிவாளர் கூறியுள்ளார்.

சாதாரணமாக இவ்வாறு பாடத் திட்டத்திற்குப் புறம்பாக கேள்விகள் கேட்கப்பட்டதாக வரும் புகார்களின் நகல்கள், திருத்தும் ஆசிரியர் குழு தலைவருக்கு அனுப்பப்படும் என்றும் உண்மையாகவே கேள்விகள் பாடத்திட்டத்திற்குப் புறம்பாக கேட்கப்பட்டிருந்தால், அக்குறிப்பிட்ட தேர்வு எழுதும் மாணவர்கள் பாதிக்கப்படாதபடி மதிப்பெண் வழங்குவதற்கான குறிப்புகளை அனுப்புவார்கள் என்றும் அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார். மேலும் இம் மாதிரி புகார் மீண்டும் வராதபடி தகுந்த முன்னேற்பாடு எடுக்கப்படுகிறது என்பதையும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத்தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான விவகாரம். தேர்விலே அன்றையதினம் மாணவிகள் அமர்ந்து கேள்வியைப் பார்த்தவுடனே அதிர்ச்சியுற்று கண்ணீர் வடித்திருக்கிறார்கள். பெற்றோர்களும் கூட ரெப்ரசண்ட் செய்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியைச் சேர்ந்த ப்ரபஸர் மாணவிகளை அழைத்துக் கொண்டு யுனிவர்சிட்டிக்குப் போய் ரெப்ரசன்டேஷன் கொடுத்திருக்கிறார். விவர அறிக்கையில் 10 மார்க் கேள்வி மட்டும் தான் அவுட் ஆப் போர்ஷன் என்ற வகையில் வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவுட் ஆப் சிலபஸ் வந்திருப்பது உண்மை. மாணவிகள் மத்தியில் உள்ள எண்ணம் எல்லாம் 100-க்கு 80 மார்க் உள்ள கேள்விகள் எல்லாம் அவுட் ஆப் சிலபஸிலே இருந்துதான் வந்திருக்கிறது

கவன ஈர்ப்புகள்

[திரு ப. பொன்னுரங்கம்]

என்று சொல்லப்படுகிறது. அந்த விவரத்தை வேண்டுமானால் நான் படித்து விடுகிறேன்....(குறுக்கீடு) அமைச்சரிடத்திலேயே கொடுத்துவிடுகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி யுனிவர்சிட்டியோடு தொடர்பு கொண்டு அந்த மாணவிகளுக்குத் தக்க மார்க் கொடுக்க ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். பிளஸ் 2 தேர்விலும் கூட இதே நிலைமைதான் என்று நான் அறிகிறேன். எனவே இதுபற்றிக் கவனித்து உரிய மார்க் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். அந்த வகையில் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினை சம்பந்தமாக ராணி மேரி கல்லூரி மாணவிகள் தான் தங்களுடைய குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிறகு எத்திராஜ் கல்லூரியில் இருந்தும் புகார் வந்திருக்கிறது. இந்த இரண்டு கல்லூரிகள் தவிர மற்ற கல்லூரிகளில் இருந்து எந்தப் புகாரும் வரவில்லை. ஆகவே தவறுக்குக் காரணம் பல்கலைக் கழகம் அல்ல என்பதும் சம்பந்தப்பட்ட கல்லூரிகளிலே சொல்லித் தந்தவர்கள்தான் குறைபாட்டுக்குக் காரணமாக இருப்பார்கள் என்பதற்கு இடம் இருக்கிறது. எப்படியோ மாணவிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே பாதிக்கப்பட்ட மாணவிகளைப் பொறுத்தவரையில் ஒரு அனுதாபத்தோடு இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(23) கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலக்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏலக்காய்க்கு போதுமான விலை இல்லாமையாலும், கம்பம், தேனி போன்ற இடங்களில் ஏலம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமையாலும், தாங்கள் உற்பத்தி செய்துள்ள ஏலத்தை விற்க முடியாமல் ஏல விவசாயிகள் படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.